பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 20 புதன்கிழமை 06.09.2023 அதிர்வு 37

## ஆட்ட நிர்ணயம்: சிக்கினார் சசித்ர



இலங்கைக் கிரிக்கெட் வீரர் சசித்ர சேனாநாயக்க ஆட்ட நிர்ணயம் செய்த குற்றச்சாட்டின் 04






# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி இன்று மீண்டும் ஆரம்பம்

(என்.புவியரசன்)

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நேற்று மீண்டும் ஆரம்பமான நிலையில் சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன், முல்லைத் தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர்களான க.கனகேஸ்வரன், சி.குணபாலன் ஆகியோர் நேரில் சென்று பார்வை யிட்டனர்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் 04

### ‘சனல் -4’ கணொலி மூலமான பிரசாரம்

# சில சர்வதேச சக்திகளைக் காப்பாற்ற அஸாத் மௌலானா எடுக்கும் முயற்சி!

## பிள்ளையான் நாடாளுமன்றில் விளக்கம் சர்வதேச விசாரணையையும் கேட்கிறார்



“ஸஹ்ரானும் அவரது குழுவினரும் ‘மதத்துக்காக மரணிப்போம்’ என்று சத்தியப்பிரமாணம் செய்து, சிலர் உயிரிழந்தும் சிலர் சிறைகளிலும் உள்ளனர். இவர்கள் மதத்தின் பெயரால் ஊக்குவிக்கப்படுவதற்கும், இவர்களின் மரணங்களை ஊக்குவிக்கவும் சில மதங்களும் உள்ளன. அதற்குப் பின்னால் சில அரசியல் சக்திகளும், சர்வதேச சக்திகளும் உள்ளன. அவற்றைக் காப்பாற்ற அஸாத் மௌலானா எடுக்கின்ற முயற்சிதான் இது என்ற பலத்த சந்தேகம் எனக்கு இருக்கின்றது. 04

# சு.கவிலிருந்து அதிரடியாக தூக்கி வீசப்பட்டார் தயாசிறி

### கட்சியின் மாநாடு நடந்து முடிந்த கையோடு மைத்திரிபால ஆட்டம்





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

அவரின் பதவிக்கு 04

# சர்வதேசத்தின் கண்காணிப்பின்றி அகழ்வு முன்னெடுக்கப்படுவதால் திருப்தியில்லை

### கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பில் ரவிகரன் கருத்து




(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு விவகாரம், சர்வதேச கண்காணிப்பின்றி இடம் பெறுவது திருப்தியளிக்க வில்லை என்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார். 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

## ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதலில்

# பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் சர்வதேச நீதிமன்றை நாடுவார்கள்!

## ‘சனல் - 4’ காணொலியைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமை என எச்சரிக்கை

ஈஸ்டர் ஞாயிறுக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் நிச்சயம் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவார்கள். ‘சனல் – 4’ வெளியிட்டுள்ள காணொலியைத் தொடர்ந்து புலனாய்வு பிரிவின் பிரதானி சுரேஷ் சலே மீது பழியை சுமத்தி தப்பித்துக்கொள்ள ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். ராஜபக்ஷர்களின் ஆட்சியில் கொலை, இரத்தம் என்பன பிரதான அம்சங்களாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று புதன்கிழமை இடம்பெற்ற சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ‘சனல் – 4’ செய்தி வெளியிட்டதன் பின்னர் பலர் கலக்கமடைந்துள்ளனர். அமெரிக்காவின் பி.பி.சி. செய்தி நிறுவனமும் எதிர்வரும் காலங்களில் பல விடயங்களை வெளியிடலாம். உண்மையை வெகு நாளைக்கு மறைக்க முடியாது.

ராஜபக்ஷர்கள் மரணம், கொலை ஆகியவற்றின் ஊடாகவே ஆட்சிக்கு வருவார்கள், கொலைகள் ஊடாகவே ஆட்சியை தக்கவைத்துக் கொள்வார்கள். கோட்டபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக பதவி வகித்த வேளையில் தொழில் வல்லுநர்கள், ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் போத்தல ஜயந்த மற்றும் அந்த சங்கத்தின் செயலாளர் சனத் பாலசூரிய ஆகியோரை அழைத்து ‘அளவுக்கு மீறி செயற்பட வேண்டாம், தெரியும் தானே நடப்பதை... ஆகவே



ஊடகவியலாளர்களின் போராட்டத்தை உடன் நிறுத்துங்கள்’ என்று அச்சுறுத்தினார்.

பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய ராஜபக்ஷ பதவி வகித்தபோது பல நெருக்கடிகளுக்கு மத்தியில் தொழில் வல்லுநர்களின் செயலாளர் சனத் பாலசூரிய ஜேர்மனிக்கு சென்றார். போத்தல ஜயந்த கடுமையாக தாக்கப்பட்டு முல்லேரியா வைத்தியசாலைக்கு முன்பாக வீசப்பட்டார். அதன் பின்னர் போத்தல ஜயந்த அமெரிக்காவுக்கு சென்றார்.

2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிரச தொலைக்காட்சியில் பிரதானியாக நான் பதவி வகித்த போது புலனாய்வு பிரிவின் பிரதானியான சுரேஷ் சலேவுடன் ஒன்றிணைந்து செயற்பட்ட ஹந்தர விதாரன என்பவர் யுத்தம் தொடர்பான செய்திகளை ஒளிபரப்பு செய்வதை தவிர்க்குமாறு பலமுறை வலிறுத்தினார். நான் முடியாது,அதற்கான அதிகாரம் எனக்கில்லை என்று குறிப்பிட்டேன். அதன் பின்னர் சிரச தொலைக்காட்சி நிறுவனத்தின் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வாறான பின்னணியில்தான் ராஜபக்ஷர்களின் அரசியல் வரலாறு காணப்படுகிறது.

சிரச தொலைக்காட்சி மீது தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னர் சிரேஷ்ட ஊடகவியலாளரும்,சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். இவ்வாறான சூழலில் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயரின் வீட்டில் இடம்பெற்ற ஒரு சந்திப்பின் போது அரச புலனாய்வு பிரிவின் அதிகாரி ஒருவர் என்னிடம் ‘உங்களை 24 மணிநேரத்துக்குள் கொலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே உயிரை பாதுகாத்துக் கொள்ளுங்கள்’ என்றார்.

அதன் பின்னர் அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரின் தலையீட்டுடன் நான் பாதுகாக்கப்பட்டேன். ஆகவே இதுவே ராஜபக்ஷர்களின் வரலாறு. பொதுஜன பெரமுனவின் புதிய உறுப்பினர்களுக்கு இவை தெரியாது.

‘யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் முஸ்லிம் சமூகத்தினர் மீதான வன்முறை கட்டவிழ்த்துவிடப்படும்’ என்று குறிப்பிட்டோம். அளுத்கமை சம்பவத்தில் இருந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்தினர் கௌரவமாக வாழும் சூழல் மறுக்கப்பட்டது. இதற்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக் கூற வேண்டும். ஏனெனில். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலை கொண்டு ராஜபக்ஷர்கள்தான் ஆட்சிக்கு வந்தார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் நிச்சயம் சர்வதேச நீதிமன்றத்தை நாடுவார்கள். ‘சனல் – 4’ வெளியிட்டுள்ள காணொலியை அடிப்படையாகக் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் நிச்சயம் எடுக்கப்பட வேண்டும்.-என்றார்.

## அனைத்து இலங்கையர்களும் கட்டாயம் ‘சனல் - 4’ காணொலி பார்க்க வேண்டும்

### லசந்தவின் மகள் அகிம்சா வற்புறுத்து



‘சனல் – 4’ வெளியிட்டுள்ள உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்த காணொலியை அனைத்து இலங்கையர்களும் பார்க்கவேண்டும் எனப் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா தெரிவித்துள்ளார்

டுவிட்டர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மைகளை அம்பலப்படுத்தும் ‘சனல்–4’ இன் வீடியோவை பார்த்த பின்னர் ஏற்பட்ட உணர்வுகளை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

பல வருடங்களாக இந்த தாக்குதலிற்கும் கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் தொடர்பிருக்கவேண்டும் என நான் கருதிவந்துள்ளேன்.

இது அனைத்து இலங்கையர்களும் பார்க்கவேண்டிய மிக முக்கியமான படமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# போதையில் வானத்தை நோக்கி சுட்டாராம் இராஜாங்க அமைச்சர்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இராஜாங்க அமைச்சர் ஒருவர் மாதிவெலவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பாக அவருக்கு வழங்கப்பட்ட கைத்துப்பாக்கியால் வானத்தை நோக்கி பல முறை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மதுபோதையில் காணப்பட்ட இவர், மாடி வீட்டு பல்கனியிலிருந்து மூன்று முறை வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார் எனவும் கூறப்படுகிறது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரால் உயர் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.



# வீட்டுத் திட்டப் பணியை பூர்த்தி செய்ய தேவையான நிதியை அரசு வழங்கும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி படிப்படியாக தீர்க்கப்பட்டு வருகிறது. எனவே வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிக்க முடியும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த வீட்டுத் திட்டப் பணிகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை பெற அரசின் தலையீடு தேவைப்பட்டால் தேவையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

தங்காலை, மொரட்டுவ மற்றும் ரன்பொகுனுகம பிரதேசங்களை மையமாகக் கொண்ட சபிரி அடுக்குமாடி குடியிருப்புத் திட்டத்தின் பணிகளை இந்த வருடத்துக்குள் பூர்த்தி செய்யுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிப்புரை வழங்கினார்.

இந்த மூன்று வீட்டுத் திட்டங்களும் 132 வீட்டு அலகுகளைக் கொண்டிருக்கின்றன. அவை 30 வீடுகளைக் கொண்ட தங்காலை சபிரி அடுக்குமாடித் திட்டம், 72 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட ரன்பொகுனுகம வீடமைப்புத் திட்டம் மற்றும் 30 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட மொரட்டுவ வீடமைப்புத் திட்டம் என்பனவாகும்.

இந்த மூன்று வீட்டுத் திட்டங்களின் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

எஞ்சிய பணிகளை இவ்வருடத்துக்குள் பூர்த்தி செய்து விரைவில் மக்களிடம் கையளிக்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வீட்டுத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் 2022 ஆம் ஆண்டு நிறைவடைய வேண்டும். எனினும், கொரோனா தொற்று, போராட்டம் மற்றும் பொருளாதார நெருக்கடி கார ணமாக இந்தக் காலத்தில் திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது,

# அளவீட்டு நியமங்களை மீறியதால் மாட்டினர்!

(கே. எ. ஹமீட் )

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (05) அம்பாறை மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் அதிகாரிகள் விசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தகே அபேயவிக்ரமேயின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கை இடம்பெற்றது.

மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் பிரிவின் உதவி அத்தியட்சகர் வீ.விக்னேஸ்வரன் தலைமையில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அளவீட்டு அலகுகள் நியமங்களை பேணாத 16 வியாபார நிலையங்களுக்கு எதிராகப் பொத்துவில் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## கொக்குத்தொடுவாய்...

கப்பட்டதற்கமைய இன்று காலை 8 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன், தொல்பொருள் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணிகளான ரனித்தா ஞானராஜா, வி.கே.நிறஞ்சன், கொக்குளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர், தடயவியல் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் ஆகியோர் முன்னிலையில் அகழ்வுப் பணி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த 2023.06.29 அன்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் நீர்க் குழாய்கள் பொருத்துவதற்காக நிலத்தைத் தோண்டிய போது அங்கு மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின்னர் இன்று மீண்டும் அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இதற்கான நிதியை அரசு ஒத்துக்கியுள்ளது.

## சு.கவிலிருந்து...

சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட் டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் 72 ஆவது தேசிய மாநாடு நடந்து முடிந்த கையோடு இந்தப் பதவி நீக்கத்தை கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறி சேன அறிவித்திருக்கின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் தயாசிறி ஜயசேகர பங்கேற்றிருந்தார். கட்சி இனி ஒற்றுமையாக பயணிக்கும் எனவும் கூறியிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

## ஆட்ட ...

கைது செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு அமைச்சின் விசேட புலனாய்வுப் பிரிவினாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேசத்தின்...

அதேவேளை, இந்த அகழ்வுப் பணியில் தொல்லியல் துறையினர் மீதும் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி மீண்டும் இன்று முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அந்த அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான விடயத்தில், கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற ஆரம்பகட்ட அகழ்வுப் பணிகளில் 13 சடலங்களின் உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று தகவல்கள் வெளிவந்தன.

அதன் பின்னர் அந்த அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டு, கடந்த 5ஆம் திகதி மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. எனினும், முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக அகழ்வுப் பணிகள் தாமதமாகி, செப்டெம்பர் 6ஆம் திகதி இந்த அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அகழ்வுப் பணி தொடர்பில் கடந்த ஜூலை மாதம் 13ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தொல்லியல் துறைசார்ந்தவர்களும் இந்த அகழ்வுப் பணிகளில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால், இங்கு அவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் தொல்லியல் துறைசார்ந்தவர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

தற்போது மக்கள் மத்தியில் தொல்லியல் துறையினர் மீது பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஏனெனில் குருந்தூர் மலை விவகாரத்தில், தொல்லியல்துறை தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றம் கடந்த ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி கட்களையொன்றை வழங்கியிருந்தது. அந்தக் கட்டளையில் தொல்லியல் துறையினர் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மூன்று தடவைகள் மீறியமையுடன், குருந்தூர் மலையில் விகாரை கட்டுவதற்கு ஒத்துழைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் தொல்லியல்துறையினர் இந்த அகழ்வுப் பணி விடயத்திலும் சரியாக நடந்துகொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

அதேவேளை, இந்த மனிதப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேசக் கண்காணிப்புத் தேவை எனவும், சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலேயே இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், எமது தமிழ் மக்கள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

நாங்கள் நீதிமன்றையும், சட்ட வைத்திய அதிகாரிகளையும் மதிக்கின்றோம். ஆனால், அனைத்துத் தரப்பினரும் இந்த விடயத்தில் சரியாகச் செயற்படுவார்கள் என எதிர்பார்க்க முடியாதுள்ளது.

குறிப்பாக இங்கு பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஆகியோரே இங்கு அதிகமாகக் காணப்படுகின்றனர்.

இந்தநிலையில் மக்கள் சார்பாக அங்கு சட்டத்தரணிகள் மாத்திரமே புதைகுழி வளாகத்துக்குள் செல்ல முடியும். மக்களின் பிரதிநிதிகளாக வேறு யாரும் புதைகுழிப் பிரதேசத்துக்குள் செல்ல முடியாது.

எனவே, எமக்கு சந்தேகங்கள் எழாதவாறு இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெறுவதுடன், உண்மைத் தன்மை வெளிப்பட வேண்டும்.

சர்வதேச மற்றும் ஐ.நாவின் கண்காணிப்புக் குழுக்கள் இல்லாமல் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுவதில் எமக்குத் திருப்தி இல்லை என்பதையும், தொல்லியல்திணைக்களத்தினையும் நாம் நம்பப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்." – என்றார்.

## சில சர்வதேச...

"ஆகவே, இதற்குச் சர்வதேச விசாரணை நடத்தி அவரையும் இதற்குள் உள்வாங்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை."

– இவ்வாறு இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"என்னோடும், என் அமைப்போடும் சேர்ந்து பயணித்த ஹன்ஸீர் அஸாத் மௌலானா புகலிடக் கோரிக்கைக்காக அங்கு அவருடைய வாழ்க்கையை நிறுவிக்கொள்வதற்காகப் பல பொய்யான பிரசாரங்களை முன்வைத்திருக்கின்றார். அவர் எமது அமைப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகி ஒரு வருடத்தைக் கடந்துள்ள நிலையில் தற்போது அவரது இந்தச் செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

'சனல் – 4' செய்திச் சேவையில் இருந்து வந்த செய்தி குறித்து அச்சம் கொள்ளவேண்டிய தேவை எனக்கில்லை. இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் ஐ.எஸ். அமைப்பால்தான் மேற்கொள்ளப்பட்டது என அந்த அமைப்பே ஏற்கொண்டுள்ளது.

இவ்வாறு இருக்கையில் வெளிநாட்டுப் புகலிடம் கோரி சென்ற அஸாத் மௌலானா இந்த விடயத்தை மறுப்பக்கம் திருப்ப நினைக்கிறார் என நான் நம்புகின்றேன். ஸஹ்ரானும் அவரது குழுவினரும் மதத்துக்கான மரணிப்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்து சிலர் உயிரிழந்தும் சிலர் சிறைகளிலும் உள்ளனர். இவர்கள் மதத்தின் பேரால் ஊக்குவிக்கப்படுவதற்கும், இவர்களின் மரணங்களை ஊக்குவிக்க சில மதங்களும் உள்ளன. அதற்குப் பின்னால் சில அரசியல் சக்திகளும், சர்வதேச சக்திகளும் உள்ளன. இதைக் காப்பாற்றுகின்ற அஸாத் மௌலானா எடுக்கின்ற முயற்சிதான் இது என்ற பலத்த சந்தேகம் எனக்கு இருக்கின்றது.

ஆகவே, இதற்குச் சர்வதேச விசாரணை நடத்தி அவரையும் இதற்குள் உள்வாங்க வேண்டும் என்பதே எனது கோரிக்கை." – என்றார்.

# சரத் வீரசேகரவின் உரை உண்மைக்குப் புறம்பானது

## கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் கண்டனம்

(நூருல் ஹுதா உமர் )

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சனல் 4 ஒளிபரப்பிய நேர்காணல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவின் உரையில் "இஸ்லாமிய மத சிந்தனையின்படி" தீவிரவாதிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது என்ற அறிக்கையை நான் முற்றிலும் கண்டிக்கிறேன்.

இவ்வாறு கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியது அமைதியான இஸ்லாம் மார்க்கத்தை அடிப்படையாக கொண்டு அல்ல. மாறாக தீவிரவாத சித்தாந்தக் குழுக்களால் சிதைக்கப்பட்ட மதச் சிந்தனைகள் மூலம்தான் அவர்கள் தாக்குதல் நடத்தினார்கள்.

இஸ்லாமில் தற்கொலைத் தாக்குதல் முற்று முழுதாகத் தடைசெய்யப்பட்ட ஒன்றாகும். இஸ்லாம் இவ்வாறான செயல்களை நேரடியாகவே எதிர்க்கிறது என்பதை நான் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.




போலியான ஒப்பந்தச் சித்தாந்தத்தை கொண்ட தீவிரவாதி ஸஹ்ரான் உட்பட அவரின் குழுஎன்று சொல்லப்படுபவர்கள் உலகளாவிய புவிசார் அரசியல் சதிக்கு ஆயுதமாகப் பயன்படுத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்க முடிகிறது. ஆனால் அதை உறுதிப்படுத்த முடியாது உள்ளது.

ஷங்ரிலாவில் மட்டும் ஏன் இரண்டு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன? தாஜ் மீதான தற்கொலைக் குண்டு வெடிப்பு ஏன் மாற்றப்பட்டு தெஹிவளைக்கு கொண்டு செல்லப்பட்டது? அபு ஹிந்த் என்பவர் யார்? சாரா தப்பிக்க உதவிய ஒரு பொலிஸ் அதிகாரி ஏன் கைது செய்யப்பட்டார்? இப்படிப் பல கேள்விகளுக்கு முஸ்லிம் சமூகம் பதில் தேடுவதுடன் இது பற்றிச் சிந்தித்துப் பதில் தேடும் அளவுக்கு முஸ்லிம் சமூகம் புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சனல் 4 போன்ற இஸ்லாமிய விரோத ஊடகங்களின் பின்னால் நாம் சென்றிருக்க மாட்டோம்.

போலியான கடும்போக்கு மார்க்க சிந்தனைக்கு உட்பட்ட ஸஹ்ரான் போன்றவர்கள் பூகோள அரசியலுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தால், அதிலிருந்து முஸ்லிம்கள் கற்க வேண்டிய பாடம் என்னவென்றால் எதிர்கால சந்ததிகளை இவ்வாறான போலியான கடும்போக்கு சிந்தனைகளிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதுதான்.

அத்தோடு பல்லின சமூகம் வாழும் எமது நாட்டில் முஸ்லிம் சமூகம் இஸ்லாத்தின் கொள்கைகள் பற்றி ஏனைய இன சகோதரர்களுக்கு விளக்க வேண்டியது அவசியமாகிறது.

சுதந்திர போராட்டத்திலும் சரி, உள்நாட்டு யுத்த காலத்திலும் சரி நாட்டுக்கு ஆபத்து வரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் நாட்டைப் பாதுகாக்கும் பணியில் முஸ்லிம் சமூகம் கடந்த காலங்களில் கவசமாக நின்றுள்ளது. இனியும் அப்படிப் பாதுகாக்க முன்நிற்கும் என்பதில் ஐயமில்லை.

ஸஹ்ரான் போன்றவர்களின் சதிவலையில் முஸ்லிம் சமூகத்தை வீழ்த்தி சர்வதேச நிகழ்ச்சி நிரல்களில் இலங்கை முஸ்லிங்களை அகப்படுத்த முடியாது. இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம், தேசப்பற்றுள்ள இலங்கையர்களாக வாழ்பவர்கள்.–என்றுள்ளது.

# பயிற்சிச் செயலமர்வு

(எம். எப். நவாஸ்)

சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் கணினிமயப் படுத்தலுக்கான மென்பொருள் மேம்படுத்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகளை முன்கொண்டு செல்லும் வகையிலான ஆறு நாள் பயிற்சி செயலமர்வு அண்மையில் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிச் செயலமர்வில் வளவாளராக சிரேஸ்ட சமுர்த்தி முகாமையாளர் எம்.டி.எம்.உஸைன் கலந்து கொண்டார்.

இந்தப் பயிற்சிச் செயலமர்வில் நிந்தவூர், அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி வங்கி, வங்கிச் சங்கம், மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுயநல அரசியல் நகர்வு!

ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிய விடயம் பல உண்மை நிலைமைகளை வெளிக் கொணர்ந்திருக்கின்றது.

உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மூலம் இவ்விடயத்தில் நீதி கிட்டாது என்பதற்கு அவர் கூறும் காரணங்கள் அனைத்தும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் விசாரிப்பதற்கு உள்நாட்டுப் பொறிமறை சரிவராது, சர்வதேச நியமங்களுக்கு அமைவான சர்வதேச பங்களிப்புடனான விசாரணையே அவசியம் என்ற தமிழர்களின் வலியுறுத்தல்களுக்கும் முழு அளவில் பொருத்தமானவையே.

அதிலும் விட இதற்கு - யுத்தக் குற்றச்சாட்டு விடயங்களுக்கு - சர்வதேச விசாரணைப் பொறிமுறையே அவசியம் என்ற கட்டாயமும் காரணங்களும் நியாயங்களும் மிக அதிகமானவையும் கூட.

இப்போது ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் 'சனல் - 4' வெளியிட்ட ஆவணப்படத்தை அடுத்து எழுந்துள்ள சர்ச்சை புதிய விடயமன்று. இந்த விடயத்தை ஒட்டி, தாக்குதல் நடந்த பின்னர் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் சில தரப்புகள் அதிகாரத்துக்கு வரும் நோக்கத்துடன் - அதற்கான அரசியல், களச்சூழ்நிலைகளை ஏற்படுத்தும் இலக்குடன் - இத்தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கலாமென்று கருதப்படுவதால், அந்தக் கோணத்திலும் இது விசாரிக்கப்பட வேண்டும் என்று மிகத் தெளிவாகவும், திட்டமிட்டமாகவும், வெளிப் படையாகவும் கூறியிருந்தமையும் கவனிக்கத்தக்கது.

'சனல் - 4' அம்பலப்படுத்திய சில இரகசியங்களை அடுத்து தெற்கில் ஒரு சலசலப்பு தோன்றியிருக்கின்றது. இந்த சலசலப்பு கூட - அதிர்ச்சி கூட - இத்தாக்குதலில் கொல்லப்பட்ட 275 பேரின் உயிரிழப்பு மற்றும் அங்க வீனர்களாக்கப்பட்ட அல்லது படுகாயப்படுத்தப்பட்ட ஐந்நூறு பேரின் பாதிப்புகள் மற்றும் அவர்கள் தம் வாழ்வில் எதிர்கொள்ளும் அவலங்கள் ஆகியவற்றின் மீதான பச்சாதாபத்தில - இரக்கத்தில் - எழுந்தவை அல்ல. அவ்வாறு பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிட்ட வேண்டும் - நியாயம் செய்யப்பட வேண்டும் - என்ற சிந்தனையில் எழுந்தவை அல்ல.

மாறாக, தாம் ஆட்சியைப் பிடிப்பதற்காக இத்தகைய வன்முறைகளுக்கு வழி செய்த தரப்புகளை அரசியல் ரீதியாக பின்னடைவுக்குள் தள்ளிப் பழிவாங்குவதற்கான சிந்தனை மட்டும்தான் இந்தக் கிளர்ச்சியில் எழுந்துள்ளது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட கொடூரத்தின் போது கிறிஸ்தவ மதத் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் வாய் திறக்கவில்லை. பல்லாயிரக்கணக்கானோர் கொன்றொழிக்கப்பட்டு பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட போது அந்த மக்களுக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை மூலம் நீதி, நியாயம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அவர் ஆதரவு வழங்கவில்லை.

ஆனால் பின்னாளில் தனது கிறிஸ்தவ மக்கள் அதே பாணியில் கொன்றொழிக்கப்பட்ட போது, அவர் தட்டை மாற்றி, சர்வதேச விசாரணைக்காக ஜெனிவா வரை அலைந் தார். அச்சமயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அந்த நிலைப்பாட்டை ஆதரிக்கவில்லை.

ஆனால், இப்போது தமது அரசியல் எதிரிகள், அவர்களின் அரசியல் சுயநலங்களுக்காக இத்தகைய தொடர் தாக்குதலுக்கு வழி செய்தார்கள் என்ற கதை உறுதியாகும் போது, அந்த அரசியல் எதிரிகளை வீழ்த்துவதற்காக சர்வதேச விசாரணைப் பொறிமுறையை அங்கீகரித்து, வற்புறுத்துகின்றார் சஜித் பிரேமதாஸ. எல்லாமே சுயநல அரசியல் நகர்வுதான்.

## தெய்வீக திருக் கூட்டத்தில் நல்லூர் ஆலயத்தில் நாளை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீக திருக்கூட்ட தொடர் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நாளை வியாழக்கிழமை மாலை 4.15 மணிக்கு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் என்.எஸ்.இராமநாதன் சிவரூபன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் முன்னிலையில் அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன குருதேவர் சிவசுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் வணக்கத்துக்குரிய ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அருளுரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஸ்ரீதுர்க்காதேவி தேஸ்தான தலைவர் செஞ் சொற்செல்வர் ஆறு. திருமுருகன் பிரதம அதிதியாகவும் வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் சற்குணானந்தன் கைலாச நாதன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்வர்.

நல்லூர் கைலாசநாதர் வேதசிவாகம அறநெறிப் பாடசாலை, ஸ்ரீமுத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

"மந்திரத்தின் மகிமை" எனும் தலைப்பில் திருமதி மு.விஜயகுமாரியும் "செந்நன்றி மறவாமை " எனும் தலைப்பில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.ஜசித்ராவும் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

பிரம்மஸ்ரீ தி.ஸ்ரீசந்திரமௌலிகர சர்மா அவர்கள் வழங்கும் இசைக்கச்சேரி மற்றும் வாத்திய இசை என்பன வும் நடைபெறும்.

## கதிரைகள் அன்பளிப்பு




(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கைப் பரப்புச் செயலாளருமான கே.எம்.அப்துல் றஸ்ஸாக் (ஜவாத்) அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனைக் கிளை அலுவலகப் பாவனைக்கு ஒரு தொகை கதிரைகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.

## அரசின் தாளத்துக்கு நிதிக் குழு ஆடாது!

### நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

அரசு முன்வைக்கும் பிரேரணைகள் மற்றும் சட்டப் பத்திர ஆணைகளில் முறையற்ற வகையில் தலையிட எதிர்க்கட்சி தயாரில்லை. நிதிக் குழுவானது, ஆய்வுகள், அவதானிப்புகள், தரவுகளைத் தேடுதல் மற்றும் தரவுகளை மையமாகக் கொண்ட அறிவியல் பகுப்பாய்வை மேற்கொள்ளும் ஒரு குழுவா? அல்லது அரசு மற்றும் ஜனாதிபதி கூறும் வார்த்தைக்கு ஆடும் குழுவா? என்பதை தீர்மானிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (06) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வங்குரோத்து நிலையில் இருந்து மீள முயற்சிக்கும் நாடு என்ற வகையில், நிதிக் குழு என்பது ஒருவருக்கொருவர் கூறும் தாளத்துக்கு ஆடும் குழுவாக இருக்க முடியாது. நிதிக் குழுவின் தலைவர் பதவி கல்வி கற்ற புத்திசாலியான கலாநிதி ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்.

செயற்பாடுகளை ஆராய நிதி பற்றிய தெரிவுக் குழுவுக்கு நியாயமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.





# சுரட்டிக்குளத்தில் சிரமதானம்!

(த.சுபேசன்)

நீர் நிலைகளை சுத்தப்படுத்தும் தேசிய வாரத்தை முன்னிட்டு நேற்று (05) செவ்வாய்க்கிழமை நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட சுரட்டிக் குளத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது கமக்கார அமைப்பின் உறுப்பினர்களால் குளததைச் சுத்தப்படுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டது.

சிரமதான நிகழ்வில் நாவற்குழி கிழக்கு கிராம அலுவலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

# எட்டுப் பேருக்கு பல்கலை.வாய்ப்பு

(ஏ.எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் இருந்து இந்த முறை 08 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்று கல்லூரி அதிபர் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் பரீட்சைக்கு தோற்றிய 20 மாணவிகளுள் 19 பேர் அனைத்து பாடங்களிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுள் 08 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றிருப்பதுடன் ஒரு மாணவி மூன்று பாடங்களிலும் ‘ஏ’ சித்திகளை பெற்றுள்ளார். கடந்த காலங்களைவிட இந்த முறை நிறைய ‘ஏ’ சித்திகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தக் கல்லூரியில் கடந்த முறை 10 மாணவிகள் பரீட்சைக்குத் தோற்றி, 4 மாணவிகள் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகியிருந்தனர்.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் சாய்ந்தமருதில் இயங்கிவரும் தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் இருந்து இதுவரை 38 மாணவிகள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளனர் என்றும் அதிபர் எஸ்.எச். ஆதம்பாவா தெரிவித்தார்.

# போதைக்கு எதிராக தன்னிலைப் பிரகடனம்

(எம். எப். நவாஸ்)

போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனைக்கு எதிரான மாபெரும் தன்னிலைப் பிரகடனம், அக்கரைப்பற்று பிரதான வீதி மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவட்டத்தில் அண்மையில் (01) இடம்பெற்றது. இதன்போது பள்ளிவாசல்கள் சார்பாகப் பிரதேச செயலாளரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.







# அம்பாறை மாவட்ட செயலாளர் அக்கரைப்பற்றுக்கு விஜயம்

(எம்.எப் .நவாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்குஅம்பாறை மாவட்ட செயலாளர் அண்மையில்( 01 ) விஜயம் மேற்கொண்டார்.

இதன் போது நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் காணப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச நுரைச்சோலை விவசாயிகளின் காணி தொடர்பான பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். நுரைச்சோலை விவசாயிகளுடன் நீண்ட நேரமாக கலந்துரையாடலை மேற்கொண்டார்.

அத்துடன் அக்கரைப்பற்று பிரதேச செயலக பௌதிக வளம், ஏனைய விடயங்கள் சம்பந்தமாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இதன் போது அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர் உட்பட விவசாய அமைப்புகளின் தலைவர்கள் , விவசாயிகளும் என பலரும் கலந்து கொண்டனர்.




# விளையாட்டு மைதானத்துக்குக் காணி

(எஸ். சினீஸ்கான்)

நீண்ட காலமாக மஹ்ரூப் கிராமத்தில் பொது விளையாட்டு மைதானம் இல்லை. இது பெரும் குறையாக இருந்துள்ளது. அதனை நிவர்த்தி செய்து பொது விளையாட்டு மைதானம் ஒன்றுக்கான காணியை அடையாளப் படுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதற்காக திங்கட்கிழமை (04) அப்பிரதேசததுக்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ் தௌபீக் விஜயம் செய்தார்.கிண்ணியா விளையாடுக் கழகங்க ளின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அங்குள்ள விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்களுடன் கலந்துரையாடி உரியகாணி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.






# நல்லூரில் தெய்வீகத் திருக்கூட்டம்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் நேற்று செவ்வாய்க் கிழமை மாலை பெரியபுலம் மகாவித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் தி. கிருஷ்ணகுமார் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ். பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் நிகழ்வில் பிரதம விருந்தினராகவும், சைவ பரிபாலன சபைச் செயலாளர் சிறி சக்திவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

யாழ். பிரதேச கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், கோட்டை முனீஸ்வரன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆறுமுக நாவலர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், அத்தியடி சிதம்பர நடராஜர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் நிகழ்வுகளை வழங்கியிருந்தனர்.

நாவலர் கலாசார மண்டப இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. ஆ.ஜீவிதா "மாணவர் வாழ்வில் கலை" என்னும் தலைப்பில் கருத்துரையை வழங்கினார்.

" யாமிருக்க பயமேன் " என்னும் தலைப்பில் ஆன்மிக பிரசாரகர் திருமதி .லோ.சிவயோகவதனியின் சிறப்புரை நடைபெற்றது.

நுண்கலைமாணி திருமதி கஸ்தூரி பிரபாகரனின் பக்தி இசை இடம்பெற்றது. தொடர்ந்து நுண்கலைமாணி சு.நிரஞ்சலாவின் நெறியாள்கையில் விஜயலக்ஷி கலையக மாணவர்களின் வயலின் இசைக் கச்சேரி சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.












# ஓய்வு நிலையில் பாராட்டு

(பௌசுல் றிபாஸ் )

சம்மாந்துறையைச் சேர்ந்த பிரதம பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீத்தைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனையில் நேற்று முன்தினம் (04) நடைபெற்றது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் 34 வருட காலமாக சேவையாற்றி இறுதியாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் பெருங் குற்றப் பிரிவுக்குப் பெறுப்பதிகாரியாக இருந்து கடந்த ஜுலை 14 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

தேசிய ஐக்கிய நல்லிணக்க ஊடக அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவரும், முன்னாள் பிரதேச சபையின் பிரதி தவிசாளருமான எம்.எஸ்.எம்.ஜெஃபர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம். எஸ். சம்சுதீன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம். என். ஜெயபத்ம கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அட்டாளை சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி ஸாபிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ் எல் எம் ஹனிபா, பொத்துவில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம்.ஐ.எம்.பிர்னாஸ் மற்றும் அக்கரைபற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எஸ். எம்.சதாத், அட்டாளச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் , ஐக்கிய இளைஞர் சமாதான குழுவின் தலைவருமான சட்டத்தரணி எம்.ஏ. அன்சில், அக்கரைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ எம் ராசிக், ஓய்வு பெற்ற பொலிஸ் அத்தியட்சகர் ஏ. வாஹித் , ஜும்மா பள்ளி வாசல் தலைவர் சட்டத்தரணி எம் எஸ். ஜுனைத்தீன், தேசிய பாடசாலையின் அதிபர் ஏ. சி . எம் . ஹரீஸ், கோலாவில் பெரு நாவலர் வித்தியாலய அதிபர் எம். மணிவண்ணன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# மூன்று பேருக்கு நிரந்தர நியமனம்

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிர தேசங்களைச் சேர்ந்த மூன்று பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு அட்டாளைச்சேனை பிரதே செயலகத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (04) அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி. ஜெகதீசனால் நியமனங்கள் வைக்கப்பட்டன.






# கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை உடனடியாக நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

(அபு அலா )

தன்னிச்சையான ஒப்பந்த கனிய மணல் அகழ்வு நடவடிக்கையை உடனடியாக நிறுத்தக் கோரித் திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (05) நடத்தப்பட்டது.

திருகோணமலை, புல்மோட்டை தொடக்கம் நிலாவெளி வரையான கடற்கரைப் பகுதிகளில் புவி சத்திரவியல் சுரங்க திணைக்களத் தலைவரின் தன்னிச்சையான ஒப்பந்தத்தின் மூலம் கனிய மணல் அகழ்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அளவீடு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதனை உடனடியாக இடைநிறுத்துமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் பிரதேச வாசிகள், சங்கங்களின் பிரதிநிதிகள், கடற்றொழில் மீன்பிடி சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்கு விஜயம் செய்த குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதனிடம் குறித்த விடயத்தை நாட்டின் ஜனாதிபதி, கிழக்கு ஆளுநர், மாவட்ட செயலாளர் ஆகியோர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லுமாறு கோரிய மகஜரைஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.





# கல்வி முன்னேற்றக் கலந்தாய்வு

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை கல்வி வலயத்தின் சாய்ந்தமருது மற்றும் காரைதீவு கல்விக் கோட்டத்தின் கல்வி முன்னேற்ற கலந்தாய்வு சாய்ந்தமருது மல்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் கல் முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம் தலைமையில் நேற்று (05) நடைபெற்றது.

இங்கு கருத்து வெளியிட்ட வலயக் கல்வி பணிப்பாளர், அதிபர்களும், ஆசிரியர்களும் இப்பிரதேச கல்வி முன்னேற்றத்துக்கு மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். மேலும் பகுதி வாரியாக என்ன பகுதியில் மாணவர்கள் குறைவாக புள்ளி பெறுகிறார்கள் என்பதை பகுப்பாய்வு செய்து அதற்கான வேலைத் திட்டங்களை தயாரிக்குமாறு அதிபர்களை அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கல்முனை வலய பிரதிக்கல்வி பணிப்பாளர்களான என். வரணியா, பி. ஜிஹானா ஆலிப், எம். எச். றியாசா, உதவிக் கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான என்.எம். மலிக், உதவிக் கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக் கல்வி அதிகாரியுமான யூ. எல். றியாழ், காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே. டெவிட் உட்பட அதிபர்களும் கலந்து கொண்டனர்.





# பொத்துவில் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(பௌசுல் றிபாஸ்)

பொத்துவில் பிரதேச மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக் கப்பட்டன.

பொத்துவில் பிரதேச செயலகத்தில் பிரதேச எம்.ஐ.எம்.பிர்னாஸ் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷா ரப், அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பீ.அனீஸ், மற்றும் மாகாண காணி உத்தியோகத்தர் முஸ ம்மில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறைந்த வருமானம் பெறும் குடும் பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த் தும் பொருட்டு 2023 வரவு செலவு திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஆடுகள் வழங் கப்பட்டன. அத்துடன் பாடசாலை மாண வர்களுக்கான விளையாட்டு உபகரணங் கள், குறைந்த வருமானமுள்ள சமுர்த்தி பெறும் குடும்பங்களின் பிள்ளைகள் க.பொ.உயர்தரம் கற்பதற்கு சிப்தொர புலமைப்பரிசில், விசேட தேவையுடை யோருக்கான கொடுப்பனவு, போன்ற உதவிகளும் இதன்போது வழங்கப் பட்டன.

# நோயற்ற வாழ்வுக்கு அறுசுவை விருந்து

(பௌசுல் றிபாஸ்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் அனுசரணை யில் சமூகவாதி எம்.ஐ.உதுமாலெவ்வை எழுதிய “நோயற்ற வாழ்விற்கு அறு சுவை விருந்து“ எனும் நூல் வெளியீடும் அறிமுக விழாவும் சனிக்கிழமை (03) ஒலுவில் கிறீன் வாசல் மண்டபத்தில் நடைபெற்றன.

ஓய்வுபெற்ற அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தொழிலதிபர் எஸ்.எஸ்.எச்.முஸ்தபா நூலின் முதற் பிரதியை நூலாசிரியர் கலாநிதி எஸ். எல்.றியாஸிடம் இருந்து பெற்றுக் கொண்டார். அம்பாறை எச்.ஈ.ஓ. நிறுவ னத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எச்.நிஹால் அஹமட் உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# விடுதியில் திருடிய இருவர் கைது

## 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மீட்பு

(மன்னார் நிருபர் )

ஒரு தொகுதி குளியல் அறை உபகரணங்களுடன் 2 சந்தேக நபர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (05) மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான குளியல் அறை உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் தாழ்வுபாடு மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 58 வயதுடையவர்கள் என மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் விடுதி ஒன்றின் குளியல் அறைகளில் இருந்து இந்தப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த விடுதியில் உபகரணங்கள் திருட்டுப் போயுள்ளன என்று அதன் உரிமையாளர் திங்கட்கிழமை (04) மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

முறைப்பாட்டுக்கு அமைவாக மன்னார் தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும், பிரதான பொலிஸ் பரிசோதகருமான சந்தன பிரசாத் ஜெயதிலக்கவின் துரித நடவடிக்கைகளை அடுத்து இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலமாக இவ்வாறான பல்வேறு திருட்டு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய போட்டிக்கு தெரிவான விபுலானந்தா ஹொக்கி அணி

( வி.ரி.சகாதேவராஜா)

கல்வி அமைச்சு நடத்தும் தேசிய பெருவிளையாட்டு போட்டிக்கு கிழக்கு மாகாண சாம்பியனான காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் ஹொக்கி அணி தெரிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற மாகாணமட்ட இறுதிப் போட்டியில் அம்பாறை டி. எஸ். சேனநாயக்க தேசிய பாடசாலை ஹொக்கி அணியை எதிர்த்து விளையாடிய காரைதீவு விபுலானந்தா அணி 03:02 என்ற கோல் அடிப்படையில் மாகாண சம்பியனாக தெரிவாகியிருந்தது. பாடசாலை அதிபர் மயில்வாகனம் சுந்தரராஜன் வெற்றி பெற்ற வீரர்களையும் பயிற்றுவித்தவர்களையும் பாராட் டினார்.

2023 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட பெருவிளையாட்டு போட்டிகளில் ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் முதலாவது போட்டியில் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அணியை 01:00 என்று கணக்கில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அணி வென்றது. இரண்டாம் அரை இறுதி போட்டியில் மட்டக்களப்பு மயிலம் பாவெளி வித்யாலயத்தை 02:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ,றுதிப் போட்டிக்குச் சென்றது. ,றுதிப் போட்டியில் அம்பாறை டி. எஸ். சேனநாயக்க தேசிய பாடசாலை அணியினரை 03:02 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

அணியினர் 2023 ஆம் ஆண்டுக்கான மாகாணமட்ட பாடசாலை போட்டியில் மாகாண சாம்பியனைத் தனதாக்கிக் கொண்டனர்.

# ‘பாரத்’ என்று பெயர் மாற்றுவதன் மூலம் இந்தியர் மனதை புண்படுத்தவேண்டாம்!

## - தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவிப்பு



எல்லா திட்டங்களுக்கும் புரியாத பெயர்களை வைக்கும்மத்திய அரசுக்கு, பாரத் என பெயர் மாற்றுவது சாதாரண ஒன்றாக தோன்றலாம் எனவும் இப்படி பெயர் மாற்றுவதன் மூலம் இந்தியர்களின் மனதை புண்படுத்தக்கூடாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி இன்று இன்று ஊடகவியலாளர்களை சந்தித்துள்ளார்.

அப்போது அவரிடம் இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றும் திட்டம் குறித்து கேட்கப்பட்டது. அதற்குப் பதில ளித்த கனிமொழி, அரசியலமைப்புச் சட்டத்தில் அவ்வாறு இருப்பதாகக் கூறுவார்கள். இந்த இரண்டு வார்த்தை களுமே அதில் உள்ளன. மேடைகளில் பேசுகிறவர்கள்கூட இந்த இரண்டு பெயர்களையும் பயன்படுத்துகிற சூழல் தான் இருந்து வருகிறது.

திடீரென்று, தேவையில்லாமல் புதிதாக ஒரு சர்ச்சையை ஏற்படுத்துகிற வகையில், பாரத குடியரசுத் தலைவர் என்பதும், இந்தியாவின் பெயரை பாரதம் என்று மாற்றப்போகிறோம் என்று கூறுவதற்குப் பின்னால் ஒரு அரசியல் இருக்கிறது. அதை நாம் எதிர்க்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக் கப்படுகிறோம்.

இண்டியா என்ற பெயரில், எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு தளத்தில் ஒரு கூட்டணியை உருவாக்கியிருக்கும் போது, அந்தப் பெயரே ஒன்றிய அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய சூழலில்தான் பெயரையே மாற்றியுள்ளனர். வர லாற்றை மாற்றுவது, பெயர்களை மாற்றுவது எனத்தொடங்கி, சட்டங்களுக் குக்கூட இந்தியில் பெயர் வைக்க ஆரம்பித்துவிட்டனர்.

எல்லா திட்டங்களுக்கும் புரியாத பெயர்களை வைக்கும் அவர்களுக்கு இதுபோல மாற்றுவது சாதாரண ஒன்றாக தோன்றலாம். எத்தனையோ விசயங்களில் மனதை புண்படுத்திவிட்டதாக கூறும் அவர்கள், இப்படி பெயர் மாற்றுவதன் மூலம் இந்தியர்களின் மனதை புண்ப டுத்தக்கூடாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பிரிவினைவாதத்தின் அடித்தளமே தி.மு.கதான் என்கிறார் அண்ணாமலை



பிரிவினைவாதத்தின் அடித்தளமே தி.மு.கதான் என்று மிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

டில்லியில் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறும் ஜி 20 மாநாட்டின் இரவு விருந்துக்கான குடியரசுத் தலைவரின் அழைப்பு கடிதத்தில், ‘இந்திய குடியரசுத் தலைவர்’ என்பதற்கு பதிலாக ‘பாரதத் தின் குடியரசுத் தலைவர்’ என குறிப்பிடப் பட்டுள்ளது.

இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் கண்ட னம் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, முதல்வருக்கு பதிலளிக்கும் வகையில் அண்ணாமலை தனது சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த ஆண்டு தனித் தமிழ்நாடு கோரிக்கையை மீண்டும் தி.மு.க. வலுப்படுத்த வேண்டும் என முதல்வர் முன்னிலையில் ஆ.ராசா பேசினார். அவரை தடுக்கவோ, அவரது கருத்துக்கு கண்டனத்தையோ முதல்வர் தெரிவித்தாரா? பிரிவினைவாதத்தின் அடித்தளமே தி.மு.கதான். இந்தியாவோ, பாரதமோ தி.மு.கவுக்கு அது பிரச்சி னையில்லை.

உங்களைப் போன்ற பிரிவினை வாதிகளை கவனத்தில்கொண்டே, நமது பாரம்பரியத்தை அனைவருக்கும் நினைவூட்டும் வகையில் அரசியல மைப்புச் சட்டத்தில் இந்தியா என்பதை பாரதம் என சட்டமேதை அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார் என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

## எனது குரல் ஒலிக்கும்: உதயநிதி உறுதி

சனாதனம் ஒழியும் வரை எனது குரல் தொடர்ந்து ஒலிக்கும் என்று தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தென்காசியில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் உதயநிதி, மணிப்பூர் மாநிலம் 5 மாதமாக பற்றி எரிகிறது. அங்கு ஆட்சி செய்வது பா.ஜ.க. இதுவரை 250 இற்கும் மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். பிரதமர் இதுவரை அங்கு சென்று பார்க்க வில்லை. மணிப்பூரில் விளையாட்டு வீரர்கள்அதிகம். அவர்கள் பயிற்சி பெற தமிழக முதல்வர் அழைப்பு விடுத்ததன் பேரில், பலர் தமிழகத்தில் தங்கி பயிற்சி எடுத்து வருகின்றனர். இதுதான் சனாதன மாதிரிக்கு, திராவிட மாதிரிக்கு உள்ள வித்தியாசம் என்று தெரிவித்துள்ளார்.

## ஆதித்யா எல்-1 விண்கலத்தின் புவி சுற்றுப் பாதை உயரம் அதிகரிப்பு

ஆதித்யா எல்-1 விண்கலத்தின் புவி சுற்று வட்டப்பாதை உயரம் இரண்டாவது முறையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

11 ஆயிரத்து 345 கிலோமீற்றர் புவி சுற்றுவட்டப்பாதையில் தற்போது ஆதித்யா விண்கலம் சுற்றி வருகிறது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

விண்கலத்தை அடுத்த சுற்றுவட்டப் பாதைக்கு உயர்த்தும் நடவடிக்கை இந்த மாதம் 10 ம் திகதி மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி முற்பகல் 11.50 க்கு ஆதித்யா எல் 01 விண்கலம் சூரியனை நோக்கி ஏவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் துறைமுகம் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்!



தானிய ஏற்றுமதிக்காக உக்ரைன் பயன்படுத்திவந்த ஒடெஸா துறைமுகம் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரான் வழங்கிய ஷஹித் ட்ரோன்களை பயன்படுத்தி இவ்வாறு ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் தானிய கப்பல்களை கருங்கடல் வழியாக செல்ல அனுமதிக்கும் ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்குவதாக ரஷ்யா அண்மையில் அறிவித்திருந்தது.

இந்த நிலையில், சில ஆபிரிக்க நாடுகளில் உணவு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதால், தானிய கப்பல்களை அனுமதிக்க வேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் உடனான சந்திப்பின் போது வலியுறுத்தவுள்ளேன் என்று துருக்கி ஜனாதிபதி எர்டோகன் தெரிவித்திருந்தார்.

இந்த சந்திப்பு நடைபெறுவதற்கு சில மணி நேரமே இருந்த நிலையில், ஒடெஸா துறைமுகத்தில் உள்ள தானிய கிடங்குகளை குறி வைத்து ரஷ்யா 32 ட்ரோன்களை ஏவியுள்ளது. அதில் 23 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தப்பட்டன என உக்ரைன் தெரிவித்துள்ளது.

# உக்ரைனுடனான தானிய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது!

## - ரஷ்ய ஜனாதிபதி புடின் திட்டவட்டம்

தங்களது வேளாண் பொருள்களின் ஏற்றுமதியை மேற்கத்திய நாடுகள் அனுமதிக்காத வரை, உக்ரைனுடனான தானிய ஒப்பந்தம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

உணவுப் பற்றாக்குறை நிலவி வரும் ஆபிரிக்க, ஆசிய நாடுகளுக்கு உக்ரைனிலிருந்து கருங்கடல் வழியாக தானியங்களைக் கொண்டு செல்வதற்கான அந்த ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படுகிறது என ரஷ்யா கடந்த ஜூலை மாதம் அறிவித்தது.

இது குறித்து துருக்கி ஜனாதிபதி எர்டோகனுடன் நடைபெற்ற பேச்சுக்கு பின்னர் புடின் வெளியிட்டுள்ள அறிக்கையில், உக்ரைனுடன் தானிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டபோது, ரஷ்யாவிலிருந்து உணவுப் பொருள்கள், உரம் ஆகியவற்றை உலகின் ஏனைய



நாடுகளுக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதிப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

ஆனால், அந்த உறுதிமொழியை மேற்கத்திய நாடுகள் நிறைவேற்றவில்லை. இதன் காரணமாகவே அந்த ஒப்பந்தத்தை நிறுத்திவைத்தோம்.

தாங்கள் கூறியபடி ரஷ்ய வேளாண் பொருள்களின் ஏற்றுமதிக்கு மேற்கத்திய நாடுகள் அனுமதி அளிக்காத வரை தானிய ஒப்பந்தம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது.

அத்தகைய ஏற்றுமதிக்கு மேற்கத்திய நாடுகள் வழிவகை செய்தால் அடுத்த சில நாள்களிலேயே ரஷ்ய–உக்ரைன் தானிய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.